# M10 நல்ல சுருக்கங்களை உருவாக்குதல்

**10.1**

**எ - வினாக்கள் குறிப்பு**

நீங்கள் பின்வரும் கேள்விகளுக்கு விடை சொல்லும்போது (ஒவ்வொரு 2 முதல் 3 வாக்கியங்கள்) ஒரு பயனுள்ள தொகுப்புக் கிடைக்கும்.

- எவர்கள் மிக இன்றியமையாதவர்கள்?
- என்ன ஆயிற்று, என்ன கதைக்கரு ?
- எப்போது அச்செயல் இடம்பெற்றது?
- எங்கே அச்செயல் இடம்பெற்றது?
- எதற்காக அது நடந்தது?
- எப்படி அது நடந்தது?




**10.2**

**நூல்களையும் கதைகளையும் சுருக்குவதற்கான குறிப்புகள்**

- பின்வரும் தகவல்களை எழுதவும்: முதலில் நூல் அல்லது கதையின் தலைப்பு, ஆசிரியர், பதிப்பாளர், பக்கங்களின் எண்ணிக்கை, நூலின் வகை (புனைகதை அல்லது, துப்பறியும்கதை, நகைச்சுவை...).
- ஒரு சிறிய சுருக்கம் எழுதுக. (3 முதல் 5 வரிகள்).
- முழுநூலின் அல்லது கதையின் அடிப்படையானவற்றை மட்டும் கொண்டு இயல் இயலாக (அல்லது பகுதி பகுதியாக) சுருக்கித் தொகுக்கவும்.
- முடிவில், இந்நூலை அல்லது கதையை நீங்கள் ஏன் விரும்பினீர்கள் என்பதைக் குறிப்பிடுக.

## 10.3

### சுருக்கங்களுக்கான ஒரு நல்ல திட்டம்

- ஒரு A4 தாளை எடுத்து ஒரு அடிமட்டத்தால் அதை பின்வருமாறு பகிர்ந்து கொள்ளவும்:
  - மேலே தலைப்புக்கு விளிம்பில் 2 செமீ இடம் விடவும்.
  - வலது பக்கத்து விளிம்பின் முடிவில் பின்னர் செயலாக்குவதற்காக திறவுச் சொற்கள் ஆகியனவற்றைப் பின்னர் எழுதுவதற்கு 4 செ.மீ. இடைவெளி விடவும்.
  - கீழே தனிப்பட்ட கருத்துக்கள், வினாக்கள் போன்றவை எழுதுவதற்கென 4 செ.மீ. இடம் விடவும்.
- தலைப்புப் பரப்பில் நீங்கள் சுருக்கியதை எழுதுக.
  எடுத்துக்காட்டு "ரோமர்காலம் பற்றிய எடுத்துரைப்பு."

ஒரு நன்கு கட்டமைக்கப்பட்ட சுருக்கத்திற்கு எடுத்துக்காட்டு




- பெரிய பரப்பில் நீங்கள் படித்த உரையின் (அல்லது உங்கள் தலைப்புக்கான உரைகள்) சுருக்கத்தைப் பதியவும். மிக இன்றியமையாத தகவல்களை மட்டும் எழுதவும். திறவுச் சொற்களை அல்லது சிறிய வாக்கியங்களை எழுதுக. சுருக்கக் குறியீடுகளைப் பயன்படுத்தவும். உங்கள் உரையைப் பகுதிகளாக வகுக்கவும்.
- படித்து உங்கள் சுருக்கத்தை கூடுதலாக்கவும். வலது கரை விளிம்பில் உங்கள் பந்தியின் ஒவ்வொரு பகுதியின் இன்றியமையாத திறப்புச் சொற்களை எழுதவும். தனிப்பட்ட குறிப்புகள் மற்றும் விளங்கவேண்டிய வினாக்களைக் கீழே எழுதுங்கள்.

  மீண்டும் எல்லாவற்றையும் முழுமையாகப் படிக்கவும். நன்கு நினைவில்கொள்ளவும்.